# மட்டக்களப்பு வடமோடி, தென்மோடி கூத்தரங்கில் ஏடுபார்ப்பவரின் வகிபாகம் - ஓர் ஆய்வு

LIBRARY
03 NOV 2020
EUSL, SRI LANKA

ஆய்வாளர் : கணபதிப்பிள்ளை புவிக்குமார்
பதிவிலக்கம் : *EU/PGS/2018/MA(D&T)/06*
சுட்டிலக்கம் : *PGS/MA(D&T)/205*

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
14 JUN 2019
Vantharumoolai
Chenkalady

முதுகலைமாணி நாடகமும் அரங்கியலும் பட்டத்தேர்வின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் முகமாக கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் நுண்கலைத் துறைக்கு 2019ஆம் ஆண்டு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது.

MA33
Thesis
Library - EUSL

நுண்கலைத்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

2019

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# ஆய்வுச் சுருக்கம்

உள்ளுணர்ச்சிகளை தெளிவாக எடுத்துக் காட்டும் கண்ணாடி போன்றவை உடலசைவுகள் மனித சமுதாயம் உடலசைவை உள்ளத்தின் பிரதிபலிப்பாக பயன்படுத்தியது என்று உணரலாம். இதன் வெளிப்பாடே கலைவடிவங்களாகும். இக்கலைவடிவங்கள் பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றி தகவல் ஊடகமாகவும், பண்பாட்டு ஆவணமாகவும் திகழ்கின்றது. சமூகத்தின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள், மன உணர்வுகளின் வெளிப்பாடு போன்ற சமூக பண்பாட்டு அம்சங்கள் இதனால் வெளிப்படுத்தப்படுகின்றன.

உலகில் வாழ்கின்ற எல்லாச் சமூகங்களையும் போலவே ஈழத்தமிழர்களும் தமக்கான தனித்துவமான வரலாற்றையும், பண்பாட்டையும் கொண்டிருக்கின்றனர். ஈழத்து தமிழ் சூழலில் பாரம்பரிய கலைவடிவங்கள் அதிகளவில் பயிலப்பட்டு வரும் பிரதேசங்களுள் மட்டக்களப்பு முக்கியமானது. குறிப்பாக மட்டக்களப்பின் பாரம்பரிய கூத்தரங்க முன்னெடுப்புக்கள் குறிப்பிட்டு சொல்லப்படுபவை.

பாரம்பரிய அரங்க வடிவங்களுள் கூத்தரங்கும் தனித்துவமானது. சமூகத்தில் பல் தரப்பட்டவர்களது பங்கெடுப்புக்களாலும், பங்களிப்புகளாலும் இயங்குகின்ற சமுதாய அரங்க வடிவமாக காணப்படுவதே இதன் தனித்துவமாகும். கூத்தரங்கானது செவிவழிப் பாரம்பரியமாக அடுத்தடுத்த தலைமுறையினருக்கு கடத்தப்பட்டு தனது ஆற்றுகை அழகியலினை வெளிப்படுத்தினாலும் அண்ணாவியார், ஏடுபார்ப்பவர், கூத்தர், சபையோர், முன்னீடுகாரர், உடையலங்காரம் செய்பவர் எனப் பலர் கூத்தரங்க முன்னெடுப்பில் சம்பந்தப்படுகின்றனர்.

மட்டக்களப்பு கூத்தரங்குகள் பற்றிய ஆய்வுகளுள் அண்ணாவியார் குறித்து கவனம் செலுத்தப்பட்ட அளவிற்கு மேற்படி ஏனைய கூத்து ஆளுமைகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இவ் ஆளுமைகள் குறித்து ஆய்வுகளை நிகழ்த்துவதன் மூலம் இவர்களது தனித்துவங்களையும் இதன் மூலம் கூத்தரங்கின் இயக்கத்தினையும் அறிந்து கொள்ள முடியும். அந்தவகையிலே கூத்தரங்கில் ஏடுபார்ப்பவரும் முக்கியமானவர்.

கூத்தரங்கில் முன்னெடுக்கப்படும் விடயங்களினை புறக்கண்ணினால் பார்த்து அகக்கண்ணிலே பதிவு செய்கின்ற கூத்தர்கட்கு கூத்து பனுவல்களிலே இருக்கின்ற அனைத்து விடயங்களினையும் உரிய நேரத்தில் செவி வழியாக கேள்வி ஞானம் ஊட்டுபவர் ஏடுபார்ப்பவர் ஆவார். தகுந்த வேளையில் கூத்தர்களுக்கு எடுத்துச் சொல்பவராக இவர் செயற்படுகின்றார். நவீன கல்வி கற்றுத்தந்த விடயம் எழுத, வாசிக்க தெரிந்தவர்கள் கல்வியறிவு படைத்தவர்கள் இக்கூற்றினை கட்டுடைத்து விடிய

விடிய ஆடப்படும் கூத்துக்களிலே இவர்கள் கூத்தின் பாடல்களினை மனனம் செய்து பாடுவதற்குரிய சூழலினை உருவாக்குகின்றனர். இவர்கள் நவீன கல்வி கற்றுத்தந்த கருத்தியலிலிருந்து இன்னொரு கருத்தியலினை கூத்தரங்கிலே உணர்த்துகின்றனர்.

கூத்தரங்க செயற்பாடுகளில் எழுத்துக்களினை இணைத்து சொற்களாகப் பார்க்கும் வாசிப்பு அறிவினையும், கூத்துப்பற்றிய முழுமையான பரீட்சயமும், புலமைத்துவமும் உடையவர்களாக இயங்குகின்றனர். கூத்துப்பாரம்பரியம் பற்றியறிந்த எழுத்தறிவாளர்கள் எனலாம். ஆட்ட முறைகளின் நுணுக்கங்களினை நன்கு அறிந்தவர்களாகவும், பாடல்களுக்கு மெட்டெடுத்துக் கொடுப்பவர்களாகவும் செயற்படுவதோடு, அண்ணாவியாருக்கு பக்கபலமாகவும் இன்றியமையாத துணையானவர்களாகவும் இருப்பதோடு, புலவர்களினால் எழுதப்பட்டடுள்ள கூத்துப் பனுவல்களை அதற்கேற்ற வகையில் சொல்லிக் கொடுக்கும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாகவும் செயற்படுகின்றனர்.

ஒரு விடயத்தினை இலகுவில் விளங்கிக்கொள்வதாயின் சிறந்த தொடர்பாடல் அவசியமானது கூத்தரங்கிலே ஏடுபார்ப்பவரின் குணவியல்பு மற்றும் மனநிலை என்பவற்றினூடாக சிறந்த தொடர்பாடல் இடம்பெறுகின்றது. இந்த ஆளுமைகள் ஒரே நேரத்தில் பல விடயங்களை அவதானிப்பவராகவும் சிறந்த வகையிலே நேரமுகாமைத்துவத்தினை பின்பற்றுபவர்களாகவும் விளங்குகின்றனர்.

கூத்தரங்கிலே ஏடுபார்ப்பவர்களின் தேவையின் ஒரு பகுதியாகவே மட்டக்களப்பு வடமோடி, தென்மோடி கூத்து ஆற்றுகைகளினை மையப்படுத்தியதாக இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## பொருளடக்கம்


**விடயம்** **பக்கம்**

நன்றியுரை i
ஆய்வுச்சுருக்கம் ii – iii
ஆய்வு அறிமுகம் iv – vii
அத்தியாயபகுப்பு viii – ix

**அத்தியாயம் - 01** 01 – 20

1.0.மட்டக்களப்பும் அதில் பயிலப்படும் பாரம்பரிய ஆற்றுகைக் கலைகளும்
1.1. மட்டக்களப்பின் அறிமுகம்
1.1.1. மட்டக்களப்பின் எல்லைகள்
1.1.2. மட்டக்களப்பின் சிறப்பு
1.2. மட்டக்களப்பின் கிராமிய கலைகள்
1.2.1 சமூகம் சார்ந்த கிராமிய கலைகள்
1.2.2 அருவிவெட்டு நடனம்
1.2.3 செம்பு நடனம்
1.2.4 சுளகு நடனம்
1.2.5 மீனவ நடனம்
1.3. சமயம் சார்ந்த கிராமியக் கலைகள்
1.3.1 கும்மி
1.3.2 கோலாட்டம்
1.3.3 கரகம்
1.3.4 காவடியாட்டம்
1.4. மட்டக்களப்பில் காணப்படும் பாரம்பரிய கூத்துக்கள்
1.4.1 வடமோடி, தென்மோடி கூத்து
1.4.2 வசந்தன் கூத்து
1.4.3 மகிடிக் கூத்து
1.4.4 பறைமேளக் கூத்து
1.4.5 விலாசக்கூத்து
1.5. கூத்துப்பற்றி இலக்கியங்களில் கிடைக்கின்ற சில அம்சங்கள்
1.6. மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி கூத்துக்கள்.

**அத்தியாயம் - 02** 21 - 42

2.0.மட்டக்களப்பு கூத்துக்களும் - ஏடுபார்ப்பவர்களின் உருவாக்கமும்
2.1. ஏடுபார்ப்பவர்களின் உருவாக்கப்பின்னணி
2.2 சமகாலத்தில் கூத்தரங்கில் ஏடுபார்ப்பவர்களின் முக்கியத்துவம்
2.3 கூத்தரங்கில் ஏடுபார்ப்பவரின் வாசிப்பு
2.4 கூத்தரங்கில் ஏடுபார்ப்பவரின் நினைவு
2.4.1 புலன்சார் நினைவு
2.4.2 குறுகிய கால நினைவு
2.4.3 நீண்டகால நினைவு
2.5 கூத்தரங்கில் ஏடுபார்ப்பவரின் ஞாபகம்
2.5.1 குறுங்கால ஞாபகம்

2.5.2 நீண்ட கால ஞாபகம்

**அத்தியாயம் - 03** 43 - 61

3.0 கூத்துக்கான களரியடித்தலும் ஏடுபார்ப்பவர்களின் செயற்பாடும்
3.1 களரியடித்தலின் ஏடுபார்ப்பவரின் செயற்பாடு
3.1.1 களரியடித்தலின் போது ஏடுபார்ப்பவர்களின் தொடர்பாடல்
3.1.2 களரியடித்தலின் போது தாளங்கள் பயிலுதல்
3.1.3 ஏடுபார்ப்பவரின் நேர முகாமைத்துவம்
3.1.4 களரியடித்தலில் கூத்துப்பனுவல்களை கையாள்வதும், பாவகைகளும்
3.2 கூத்துப் பனுவல்களில் மொழிப்பயன்பாடு
3.2.1 கூத்துப் பனுவலும் சமயநம்பிக்கையும்

**அத்தியாயம் - 04** 62 - 81

4.0 மட்டக்களப்பின் கூத்தரங்கில் ஏடுபார்ப்பவர்களும் அவர்கள் எதிர் கொள்ளும் சவால்களும்
4.1 த.சண்முகநாதன்
4.2 நோ.சண்முகநாதன்
4.3 க. தணிகாசலம்
4.4 கு. பிரபாகரன்
4.5 மூ. யோகானந்தராசா
4.6 ம. கேதீஸ்வரன்
4.7 ப. கதிர்காமநாதன்
4.8 க. சதாசிவம்
4.9 கூத்தரங்கில் ஏடுபார்ப்பவர் எதிர் கொள்ளும் சவால்கள்
4.9.1 பொருளாதாரம் சார்ந்த சவால்கள்
4.9.2 காலத்தின் போக்கும் நேரத்தின் போதாமையும்
4.9.3 கூத்தரங்கில் ஏடுபார்ப்பவரின் உடல், உளம் சார் பிரச்சினைகள்

நிறைவுரை
உசாத்துணைகள்
பின்னிணைப்புக்கள்